DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.310/2025

PW - 3

| | | |
|---|---|---|
| Name | : | செல்லதுரை (Lw - 3) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(**எதிரி ஆஜர் இல்லை **BNSS** பிரிவு **355-**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.)**

முதல் விசாரணை **Date : 12.06.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு ஊரக காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.05.2025ம் தேதி காலை 11.00 மணிக்கு நாமக்கல் மதுவிலக்கு அமல் பிரிவில் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது தலைமை காவலர் திரு.பாஸ்கர் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து சம்பவம் தொடர்பாக தனியறிக்கையை என்னிடம் தாக்கல் செய்தார்.

மேற்படி தனியறிக்கையின் பேரில் நான் நிலைய குற்ற எண்.151/2025 சட்டபிரிவு 4(1)(C) TNP Act-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசலை தனியறிக்கையுடன் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் ஒரு நகலை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை தனது புலன் விசாரணைக்காக எடுத்துக்கொண்டேன். **(**முதல் தகவல் அறிக்கை அ**.**சா**.**ஆ**.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** பின்னர் எதிரி ராதாரவி என்பவரை விசாரணை செய்த போது அரசு மதுபான பாட்டில்களை அதிக விலைக்கு விற்க வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை காலை 11.20 மணிக்கு கைதுகான காரணம் கூறி கைது

செய்தேன். பின்னர் தலைமை காவலர் 671 திரு.பாஸ்கர் மற்றும் தலைமை காவல் திரு.சிவராஜ் ஆகியோர் முன்னிலையில் எதிரி எவ்வித அச்சுறுத்தலும் தூண்டுதலோ, ஆசை வார்தையோ, வற்புறுத்தலோ தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 11.30 மணிக்கு பதிவு செய்தேன். பின்னர் எதிரி ஆஜர் செய்த அரசு மதுபான பாட்டில்கள் ஆன சுமார் 180 மி.லி அளவுக்கொண்ட Express Brandy-26 பாட்டில்களை காலை 12.15மணிக்கு தலைமை காவலர் திரு.பாஸ்கர் மற்றும் தலைமை காவலர் திரு.சிவராஜ் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன்.

அன்றைய தினமே 15.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் தலைமை காவலர் 671 திரு.பாஸ்கர் மற்றும் தலைமை காவல் திரு.சிவராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைப்படம் பார்வை மகஜர் தயார் செய்தேன். **(**மாதிரி வரைபடம் அ**.**சா**.**ஆ**.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** பின்னர் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட மதுபான பாட்டில்களை நாமக்கல் உதவி ஆணையர் (கலால்) அவர்களின் வசம் ஒப்படைத்தேன். பின்பு சாட்சிகள் தலைமை காவலர் 671 திரு.பாஸ்கர் மற்றும் தலைமை காவல் திரு.சிவராஜ் ஆகியோரை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். இறுதியாக எதிரியின் மீது சட்டபிரிவு 4 (1)(C) TNP Act-ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் தனியறிக்கையின் பேரில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான். சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பொதுஜனம் நடமாட்டம் உள்ள இடம் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் பொதுஜனங்களை யாரையும் எதிரி அரசு மதுபானங்களை உரிமம் இன்றி விற்பனை செய்கிறாரா என்பது பற்றி விசாரித்து தெரிந்து கொண்டோமா என்றால் இல்லை. ரகசிய தகவல் கிடைத்தது. எதிரி அரசு மதுபான கடைகளில் மது வாங்கியதாக சொல்லியுள்ள நிலையில் அந்த மதுபான கடையில் எதிரிதான் மதுபானத்தை வாங்கினார் என்பதை உறுதி படுத்தும் வகையில் ரசீதுகள் எதையும் கைப்பற்றவோ அல்லது அரசு மதுபான கடை ஊழியர்கள் யாரையும் விசாரிக்கவோ இல்லை என்றால் ரசீது ஏதும் இல்லை ஆனால் அந்த ஊழியரை விசாரித்தோம். மேற்படி ஊழியரை சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது அது அவருக்கு

எதிராக பயன்படுத்தப்படகூடும் என்ற சங்கதியை காவல் உதவி ஆய்வாளர் எதிரியிடம் கூறி ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எதிரியிடம் இருந்து மற்ற நபர்கள் மதுபானங்களை வாங்கி கொண்டு சென்றார்களா என்பது பற்றி விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட பாட்டில்கள் என் முன்னிலையில் திறந்து பார்க்கப்படவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட பாட்டில்களை என் முன்னிலையில் உதவி ஆய்வாளர் யாரிடமும் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது எதிரி போலிசாரின் பொறுப்பில் தான் இருந்தார் என்றால் சரிதான். எதிரிக்கும் வழக்கு சொத்துக்களுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் ஏற்கனவே பிற வழக்குகளில் கைப்பற்றப்பட்டு காவல்நிலையத்தில் வைத்திருந்த மது பாட்டில்களை எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் கைப்பற்றியதாக கூறி எதிரியின் மீது பொய்யாக போடப்பட்ட வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து தயாரித்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து தயாரித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கைப்பற்றிய மதுபான பாட்டில்களில் இருந்து ஆய்வுக்காக மாதிரிகள் எதையும் சேகரிக்கவில்லை என்றால் சரிதான்.

<u>**மறுவிசாரணை:**</u> இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**